எழுப்புதல் ஜெப ஐக்கியத்தின்

# ஐக்கிய மலர்

Volume No: 26 Issue No: 9 Bro.P.D.ஞானப்பிரகாசம் June - 2024

ஆயுட்கால ஐக்கிய வாக்குத்தத்தம் :

*சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்,*
*கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.*

*ஏசாயா 60:22*

2024–ம் வருட ஐக்கிய வாக்குத்தத்தம் :

**"உங்களைப்பார்க்கிலும்**
**ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை**
**நீங்கள் துரத்துவீர்கள்."** உபாகமம் 11:23.

**"நான் உன் நடுவில் வாசமாயிருப்பேன்."**

சகரியா 2:11



தனிப்பிரதி ரூ. 5.00
ஆண்டுச் சந்தா ரூ. 60.00

# ஜீன் மாத வாக்குத்தத்தம் : 2024

**"என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."** ஆகாய் 2:23

ஜீன் மாத எச்சரிப்பின் வசனம்: **"மாம்சமான சகலமான பேர்களே, கர்த்தருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்"** சகரியா 2:13

## உங்கள் சகோதரனிடமிருந்து...

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், எழுப்புதல் ஜெபஜக்கிய ஊழியர்கள் மற்றும் தேவ பிரசன்னத்தை விரும்புகிற யாவருக்கும் வாழ்த்துகளை கூறிக் கொள்கிறேன்.

இப்புதிய மாதத்திலும், கர்த்தர் நம்மோடிருந்து நம்மை ஊழியக்காரர்களாக இன்னும் உருவாக்கி நம்மை முத்திரை மோதிரமாக வைத்து கிருபையாக பயன்படுத்துவாராக. எச்சரிப்பு வசனத்தின்படி கர்த்தருக்கு முன்பாக மௌனமாயிருப்போம். கர்த்தர் இதுவரை இல்லாத கிருபைகளை இப்புதிய மாதத்தில் நமக்குத் தந்து நம்மையும், நம்முடைய குடும்பத்தையும் போஷித்து நடத்துவாராக. மாதந்தோறும் நீங்கள் பெற்று வரும் இந்த ஐக்கிய மலர் பத்திரிக்கையின் ஆசீர்வாதங்களை ஐக்கியத்துடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சுரண்டையில் நடைபெறும் ஐக்கிய ஜெபக்கூடுகையிலும் நீங்களும் குடும்பமாகவும், குழுவாகவும் வந்து கலந்து கொள்ளுங்கள். அது உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பிரயோஜனமாய் இருக்கும். உங்களுடைய ஜெப விண்ணப்பங்களையும் தெரியப்படுத்தினால் அதற்கும் நாங்கள் ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம். உங்களுக்காக ஜெபிக்கும் இந்த ஐக்கியம் இன்னும் பலப்படும்படியாக ஐக்கிய ஊழியத்திற்காகவும், ஊழியர்களுக்காகவும் எப்போதும் ஜெபிக்க கவனமாயிருங்கள். உங்கள் ஜெபத்தை நாங்கள் மிகப் பெரிய உதவியாக எப்போதும் எதிர்பார்க்கிறோம். நீங்கள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம் என்ற வார்த்தையை அடிக்கடி நினைவுகூர்ந்து தேவன் தந்த ஊழியத்தை செய்து வருகின்றோம். இன்னும் ஜெப ஐக்கியங்களில் அப்போஸ்தலர் கால கிரியைகள் நடைபெற நாங்கள் ஜெபிப்பதோடு நீங்களும் இணைந்து ஜெபியுங்கள். அப்போது மிகுந்த பலனை நாம் காணமுடியும். ஐக்கியத்திற்கு விரோதமாக எழும்பும் காரியங்கள் அதிகமாய் இருந்தாலும் தேவனுடைய கிருபையும், நம்மை அதிகமாக தாங்கினதை நாம் உணர்ந்து பரிசுத்த ஆவியானவர் பலத்தோடு ஊழியத்தை நிறைவேற்ற எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

நம் தேசத்தில் தேவன் தந்த மத்திய அமைச்சரவைக்காகவும் மற்றும் அவர்களின் சகல பொறுப்புகளுக்காகவும், தேவன் தேசத் தலைவர்களுக்கு வேண்டிய ஆரோக்கியத்தையும், ஞானத்தையும் அருள அனைவரும் இணைந்து ஜெபிப்போம். இயேசுவின் வருகை சமீபமாய் இருக்கிறபடியால் நாம் அனைவரும் ஆயத்தமாய் இருக்கவும், நம்மோடு இணைந்து ஊழியம் செய்யும் யாவரையும் இன்னும் அதிகமாய் கூட்டி சேர்க்கவும் நாம் ஜெபத்துடன் பிரயாசப்படுவோம். தேவன் தந்த ஆத்துமாக்கள் ஒருவர் கூட பின்வாங்கி போய்விடக்கூடாது எல்லாரும் திரளான ஆத்துமாக்களோடு இயேசுவின் வருகையில் காணப்பட கருத்துடன் பிரயாசப்படுவோம். இந்த புதிய கல்வியாண்டில் நம்முடைய பிள்ளைகளுக்கு தேவ ஞானமும், தேவ பெலமும் இன்னும் அதிகமாய் கிடைக்கவும், பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும் எப்போதும் ஒரு மனம் காணப்பட இன்னும் அதிகமாக ஜெபிக்க வேண்டும். இம்மாதம் நமக்கு விரோதமாக எழும்பும் எந்த பிசாசின் ஆயுதங்களும் செயல்படாமல் போக விசுவாசத்தோடு காணப்படுவோம். நம் ஐக்கியத்தைக் கொண்டு தேவன் செய்த கிரியைகளுக்காக ஸ்தோத்தரித்தும், இதுவரை இல்லாத பலத்த எழுப்புதல் ஐக்கியத்தின் மூலம் எல்லா இடங்களிலும் உண்டாக பொறுப்போடு இந்த இரட்சிப்பின் பாதையில் கடந்து வர தேவன் கிருபை செய்வாராக. ஆமென்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 9.00 மணிக்கு google meet ல் இந்த link ல் https://meet.google.com/non-taah-nua ஜெபம் நடைபெறுகிறது.


கிறிஸ்துவின் பணியில்,
**P.துரைசிங் ஞானப்பிரகாசம்,**
ஆசிரியர், Cell: 90255 53614


வங்கி மூலம் காணிக்கை அனுப்புவோர், கீழ்க்கண்ட கணக்கு எண்ணில் அனுப்பி அதின் விபரத்தை ஐக்கியத்திற்கு தெரியப்படுத்துங்கள்.

STATE BANK A/c.No
Branch : Surandai
IFSC - SBIN0011065

Bro. **P.Duraisingh Gnanapragasam**
3 0 4 0 6 4 3 8 9 6 2

**Revival Prayer Fellowship Trust**
3 2 4 1 2 6 2 4 5 7 2

G pay

+919942950132


தொடர்புக்கு: சகோ. P.D.ஞானப்பிரகாசம் Cell: 90255 53614 | சகோதரி. S.சந்திரா ஞானப்பிரகாசம் Cell: 99653 36459 | சகோ. D.ஜோயல் Cell: 99429 50132

தேவ செய்தி

## "நான் உன் நடுவில் வாசமாயிருப்பேன்" சகரியா 2:11

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதம் தேவ செய்தியாக, நான் உன் நடுவில் வாசமாயிருப்பேன் என்ற வார்த்தையை ஜெபத்துடன் தியானிப்போம். தேவன் நம் நடுவில் வாசமாயிருந்து அற்புதங்களைச் செய்வார். அவர் நம்மோடு வாசமாயிருந்து என்னென்ன காரியங்களைச் செய்வார் என்று தியானிப்போம்.

### I உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்: மீகா7:15

ஊழியர்களாகிய நாம் அனைவரும் நம்முடைய ஊழியப் பாதையிலும், குடும்பத்திலும் மற்றும் சகல காரியங்களிலும் அநேக பிரச்சனைகளை சந்திக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். அப்போது நாம் என்ன சொல்லி ஜெபிக்க வேண்டுமென்றால், தேவனே இந்த பிரச்சனையில் எனக்கு ஒரு அதிசயத்தை காணச் செய்வீரானால் தொடர்ந்து நான் உம்முடைய ஊழியத்தை செய்ய முடியும் என்று நாம் பொருத்தனையோடுகூட ஜெபிக்க வேண்டியவர் களாயிருக்கின்றோம். அப்போது நமது ஜெபத்தை ஆண்டவர் கேட்டு எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு செய்த அதிசயங்களைப் போல நமக்கும் தேவன் செய்வார். அப்.28:1-6 வசனங்களை வாசித்துப் பார்க்கும்போது மெலித்தா தீவில் பவுல் அப்போஸ்தலனுக்கு ஏற்பட்ட சோதனையையும் அதன் மத்தியில் தேவன் செய்த அதிசயத்தையும் நாம் காண முடியும். அது என்ன அதிசயமென்றால் அந்தத் தீவார் குளிருக்காக நெருப்பை மூட்டி தங்களை அனல்படுத்திக் கொண்டிருக்கும்போது சில விறகுகளை பவுல் வாரி போடும்போது, விஷப் பூச்சி அனலுறைத்துப் புறப்பட்டு பவுலுடைய கையை கவ்விக் கொண்டது. அந்த விஷப்பூச்சியின் தன்மை என்னவென்றால் சிறிது நேரத்தில் பவுல் கையில் ஏறிய விஷம் அவரை கொன்று விடும் என்று அந்தத்தீவார் எதிர்பார்த்து நிற்கும் போது, பவுலுக்கு தேவன் ஒரு அதிசயத்தை செய்தார். அது எப்படியென்றால் அவன் அந்த பூச்சியை தீயில் உதறிப்போட்டு ஒரு தீங்கும் அடையாதிருந்தான் என்று வேதத்தில் வாசிக்கின்றோம். இதைக் கண்ட அத்தீவார் இவனை கொலை பாதகன் என்று எண்ணாமல் தேவன் என்று எண்ணக்கூடிய அளவிற்கு தேவன் அதிசயமாய் வழிநடத்தினார்.

இப்பகுதியை தியானிக்கின்ற நாம் அனைவரும் அநேக நெருக்கத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தேவன் நம் நடுவில் வாசமாயிருக்கிறார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. பவுலுக்கு ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணை செய்த ஆண்டவர் நமக்கும் சரியான வேளையில் அதிசயங்களைச் செய்ய என்றும் வல்லவராயிருக்கிறார். சோர்ந்து போகாமல் வேதத்தை தியானித்து ஜெபிப்போம். தேவன் நமக்கு அதிசயங்களை நிச்சயம் செய்வார்.

### II திரளான கூட்டம் உன் வசமாகத் திரும்பும் : ஏசாயா 60:5

தேவன் நம் நடுவில் வாசமாயிருக்கும்போது அதிசயங்கள் மட்டுமல்ல, கடற்கரை மணலத்தனைப்போல திரளான ஜனங்கள் உன் வசமாய் திரும்புவார்கள் என்று வேதத்தில் வாசிக்கின்றோம். ஒரு வேளை நாம் எவ்வளவோ பிரயாசப்பட்டும் எதிர்பார்த்த பலன் இன்னும் இல்லையே என்று அங்கலாயிப்போடு நாம் இருக்கலாம். நம்முடைய அழைப்பு, ஊழிய தரிசனம் யாவும் தேவன் அறிந்திருக்கிறார். ஏற்ற வேளையிலே பலத்த மாற்றத்தைச் செய்வார். இன்று ஏசாயா 60:5ம் வசனம் நம்மில் நிறைவேறுவதை நம் ஊழியத்தில் காணயிருக்கின்றோம். இஸ்ரவேல் ஜனங்கள் 70 பேராக எகிப்திற்கு போனவர்கள். வானத்து நட்சத்திரங்களைப் போல எண்ண முடியாத அளவிற்கு பலுகிப்பெருகினார்கள். இவர்களை எகிப்திலிருந்து கானான் தேசத்திற்கு அழைத்து வர கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் தெரிந்தெடுத்தார். நம் நடுவில் வாசமாயிருப்பேன் என்ற ஆண்டவர் இலட்சக்கணக்கான ஜனங்களை வழி நடத்தக்கூடிய கிருபையை தேவன் தன் ஊழியருக்கு அருளினார். அன்றையத் தினமே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினார் என்று யாத். 12:51ல் நாம் வாசிக்கின்றோம். அவர்களில் பிள்ளைகள் தவிர 6 லட்சம் பேர் புருஷர்களாய் இருந்தார்கள் என்று வேதம் கூறுகிறது.

அன்பானவர்களே, தேவபணி ஒரு மகத்துவமான பணியாகும். இந்தப் பணியைச் செய்வதற்காக மற்ற உலகப்பிரகாரமான பணிகளிலிருந்து தேவன் நம்மை பிரித்தெடுத்து, நம் மத்தியிலே வாசமாயிருந்தும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் கிருபையில் நம்மை நடத்தி வருகிறார். இந்தப் பணிக்காக நாம் தேவனுக்கு முதலாவதாக நன்றி சொல்ல வேண்டும். பின்பு இந்தப் பணியை குடும்பமாக, குழுவாக செய்வதற்கு வேண்டிய கிருபைக்காக நாம் காத்திருந்து ஜெபிக்க வேண்டும். அப்போது தேவன் இப்பணியைச் செய்யக்கூடிய ஆவிக்குரிய பலனை இன்னும் அதிகமாக நமக்குத் தந்தருளுவார். குறிப்பாக 17 வகையான மாம்சத்தின் கிரியைகளை நம்மை விட்டு அகற்றி 9 வகையான ஆவிக்குரிய வரங்களையும், 9 வகையான ஆவியின் கனிகளையும், 8 வகையான ஆவிக்குரிய ஊழியங்களையும் இன்னும் நமக்குத் தந்து நாம் ஸ்திரப்படுவதற்குரிய விசேஷித்த வரங்களையும், நமக்கு தந்து கர்த்தர் நம்மை ஆத்தும ஆதாய பணியில் வழிநடத்துவார். இப்பணியிலே காணப்படுகின்ற தொய்வுகளை கண்டு நாம் சோர்ந்து போக வேண்டாம். அழைத்த தேவன் உண்மையுள்ளவர் அவர் நம் நடுவில் வாசமாயிருக்கிறார். நமக்கென்று நியமிக்கப்பட்ட பாதையில் சரியாய், செவ்வையாய் நடத்துவார். மோசே இப்பணியைச் செய்யும் போது அவர் செய்த

அதே அதிசயங்களை மந்திரவாதிகளும்கூட செய்தாக வேதத்தில் வாசிக்கின்றோம். குறிப்பாக மந்திரவாதிகள் இனிமேல் தன்னுடைய மந்திரத்தின் மூலம் மோசேயை ஜெயிக்க முடியாதபடி கர்த்தர் கிரியை செய்து மந்திரவாதிகளுக்கும் கொப்புளங்கள் வரக்கூடிய அளவிற்கு ஆண்டவர் மோசேயை சிறப்பாக வழி நடத்தினார். அதுமாத்திரமல்ல எத்தனையோ தீர்க்கத்தரிசிகளை தேவன் சிறப்பாக பயன்படுத்தினாலும், மோசேயை மிகச் சிறப்பாக ஊழியப் பாதையில் வழி நடத்தினதை உபா.34:12ல் நாம் வாசிக்கின்றோம். அது என்னவென்றால் கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல ஒரு தீர்க்கத்தரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று வேதம் நமக்கு கூறுகின்றது. இந்த ஊழியம் பரித்த ஆவியானவரின் அபிஷேகத்தோடு நடைபெற்றது.

கிறிஸ்துவுக்கு பிரியமானவர்களே, தேவன் நம் நடுவில் வாசமாயிருக்கும் போது நம்மை தேவன் தனியாக வைத்துவிடாதபடி எப்போதும் நம்மோடிருந்து கிரியை செய்கிறார். நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஊழியத்தை தொடர்ந்து செய்வதற்கு கவனமாய் இருக்கவேண்டும். ஊழியப் பாதையில் அநேக வஞ்சிக்கிற சூழ்நிலைகள் வரும். அதில் விழுந்துவிடாதபடி அதிக ஜெபத்துடன், விழிப்புடன் அனுதினமும் வாழ வேண்டும். நம்மை நெருக்குகிற பாரத்தையும், பாவத்தையும் தள்ளிவிட வேண்டும். தேவன் அப்போது நமக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை கொடுத்து நம்முடைய ஊழியத்தை ஆளுகை செய்வார். ஏற்ற காலம் வரும்போது நம்முடைய பிள்ளைகளும் நம்முடைய ஊழியத்தை எடுத்து நடத்தக்கூடிய அளவிற்கு தேவன் கிரியை செய்வார். இவைகளெல்லாம் தானாக நடக்கும் காரியங்களாகும். அதுமாத்திரமல்ல ஊழியத்தின் மூலமாக சந்திக்கப்பட்டவர்கள் பல்வேறு இடங்களில் சிதறி இருந்தாலும், இருக்கின்ற இடங்களிலே சாட்சியாகவும், ஆசீர்வாதமாகவும் இருப்பதை நாம் கேட்கவும் முடியும், பார்க்கவும் முடியும்.

இந்த கனமான ஊழியத்தின் ஒரு பகுதியை செய்ய ஆரம்ப நாட்களிலேயே எனக்கும் தேவன் அழைப்புக் கொடுத்தார். அந்த நாட்களில் நான் ஜெபித்த காரியம் தேவனே நீர் என்னோடு கூட வாசமாயிருக்க வேண்டும் என்பதேயாகும். மாலையிலே பாடசாலை பணி முடிந்தபிறகு வனாந்தரமான இடங்களுக்கு தனிமையில் சென்று அதிகமாக வேதம் வாசித்து, சத்தமாக ஜெபித்த நாட்கள் ஏராளம் உண்டு. அப்படி ஜெபித்த போது தேவன் என்னை பரிசுத்த ஆவிக்குள் வழி நடத்தினதை இன்றும் உணருகின்றேன். அதன் பிறகு சபைகளிலும், ஜெப ஐக்கியத்திலும் இணைந்து ஊழியம் செய்யும் போது தேவனுடைய வழிநடத்துதலை நான் காண முடிந்தது. இன்னும் காண வேண்டும் என்று விரும்பி ஜெபித்தும் வருகின்றேன். தேவன் நிச்சயமாக கிரியை செய்வார்.

## III பொல்லாத ஆவிகளையும் நாம் துரத்தலாம் : அப் 16:18

தேவன் நம் நடுவில் வாசமாயிருக்கும்போது அதிசயங்கள் மட்டுமல்ல, கடற்கரை மணலத்தனைப்போல திரளான ஜனங்கள் நம் வசமாய் திரும்புவார்கள் என்று மட்டுமல்ல, பொல்லாத ஆவிகளையும் துரத்துவார்கள் என்று வேதத்தில் வாசிக்கின்றோம். பவுல் அப்போஸ்தலர் ஊழியம் செய்த நாட்களில் கர்த்தர் அவரோடு வாசமாயிருந்து கிரியைச் செய்தார். குறிப்பாக அப்.16:16-18 வசனங்களை வாசிக்கும் போது, அசுத்த ஆவி பிடித்த குறிசொல்லுகிற ஒரு பெண் சொன்ன வார்த்தையை பவுல் எளிதாக ஜெயிக்கிறார். அந்த பெண் அநேக நாள் பவுலை பற்றி குறிசொல்லும்போது ஒரு நாள் தேவ ஆவியின் பலத்தோடு அந்த பொல்லாத ஆவியை கடிந்துரைத்தார். அந்த ஆவி அப்போதே அந்த பெண்ணை விட்டு புறப்பட்டு போய் விட்டது. இவ்வளவு விவேகமாயும், ஞானமாயும் பவுல் நடந்து கொண்டதுக்கு காரணம் தேவன் அவரோடு வாசமாயிருந்தேயாகும்.

இப்படிப்பட்ட ஆவியின் தொல்லைகள், முன் நாட்களில் மட்டுமல்ல இன்றும் உலகமெங்கும் கிரியை செய்து கொண்டிருக்கின்றதை நாம் காண்கின்றோம். அசுத்த ஆவியின் மூலமாக நாம் பாதிக்கப்படும் போது ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும் அவைகளை ஜெயிக்க முடியும். ஆகவே தான் அவைகளை எளிதில் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக விசுவாசிகளுக்கு தேவன் கொடுத்த பல அதிகாரங்களில் முதலாவது அதிகாரம் என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள் என்பதாகும் (மாற்கு 16:17). ஏன் பிசாசுகளை துரத்துகிற அதிகாரம் முதலாவது கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றால், அந்த பொல்லாத ஆவிகளை நாம் முதலாவது ஜெயிக்க வேண்டும் என்பதற்காகவே கொடுக்கப் பட்டிருக்கின்றது. இதை முதலாவதாக ஜெயிக்கா விட்டால் பின்னாட்களில் ஜெயிக்க முடியாது. நாமும் தேவனிடம் இன்னும் அதிகமாக ஜெபித்து பிசாசின் தந்திரங்களை அறிந்து நம்முடைய குடும்பத்தையும், தொழிலையும், ஊழியத்தையும் தொடர்ந்து நடத்த அறிந்திருக்க வேண்டும். பிசாசுகளை கண்டு நாம் விலகி ஓடக்கூடாது. மற்றவர்களால் தான் முடியும். என்னால் முடியாது என்று நினைக்க வேண்டாம். நம்மாலும் முடியும் என்று விசுவாசிக்க வேண்டும். நாமே ஜெபிக்கும் போது சரியான வசனத்தை தேவன் வெளிப்படுத்துவார். அந்த வசனத்தை உறுதியாக பிடித்துக் கொள்வோமென்றால் பிசாசுகளை துரத்துகிற ஊழியத்திலே நாம் சுடர்களை போல பிரகாசிக்க முடியும். இந்நாட்களில் அப்படிப்பட்ட கிருபைகளை தேவன் இன்னும் நமக்கு அதிகமாக தருவார். மேற்கண்ட ஆசீர்வாதங்களையும் இன்னும் விசேஷித்த ஆசீர்வாதங்களையும் நமக்குத் தர தேவன் நம் நடுவில் வாசமாயிருக்கிறார். ஆமென்.

சகோ. **P.D.ஞானப்பிரகாசம்,** சுரண்டை.

ஜெப எண் - 271 **ஜெப நாள்: 04-06-2024 செவ்வாய்** காலை 6.00 To மாலை 6.00 வரை.

## 12 மணி நேர உபவாச சங்கிலித் தொடர் ஜெபமும், மாதம் முழுவதும் ஜெபிக்க வேண்டிய ஜெப விண்ணப்பங்களும்

### 1. ஜூன் மாதத்தின் ஆசீர்வாதங்களுக்காக :

1. சங்கீதம் 138:14 கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார். இம்மாதத்தில் நமக்குத் தேவையானவற்றை கர்த்தரிடம் சொல்லி, அவரே அவைகளை நமக்கு செய்து தரும்படி மன்றாடி, பின்பு விசுவாசமுள்ளவர்களாய் காணப்படுவோம். இப்படியாக நடக்க ஜெபிப்போம்.

2. எஸ்தர் 4:14 நீ இந்தக் காலத்திலே மவுனமாய் இருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். இந்த மாதம் முழுவதும் அசதியாய் இராமல் ஜாக்கிரதையாய் இருந்து, தேவன் நமக்குக் கொடுத்த தேவ பணியை உற்சாகமாய் உண்மையாய் செய்ய தேவ கிருபைக்காக போராடி ஜெபிப்போம்.

3. மத்தேயு 9:33 பிசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன் பேசினான். இம்மாதம் நமக்கு எதிராக கிரியை செய்ய நினைக்கும் பிசாசின் கிரியைகளை கர்த்தர் அழித்துப்போடவும், நமக்கு தேவன் கொடுத்த குடும்பத்தையும், உலகப்பணியையும் உற்சாகமாய் செய்யும் கிருபையை தேவன் இன்னும் அருள ஜெபிப்போம்.

4. லூக்கா 18:8 சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீண்ட நாள் நமக்குக் கிடைக்காத நியாயம் இம்மாதத்தில் நமக்கு கிடைக்கவும், இதனால் நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாய் எந்நாளும் ஜீவிக்கவும் தேவன் கிருபை செய்யவும், சோர்வுகள் மாறவும் ஜெபிப்போம்.

5. மல்கியா 4:15 ஆவி அவரிடத்தில் பரிபூரணமாய் இருந்ததே. தேவ ஆவி நம்மிடம் இன்னும் பரிபூரணமாய் இருக்கவும், இதனால் நமக்கு கடினமாய்த் தோன்றும் காரியங்கள் யாவும் இலகுவாய் ஆவியின் பலத்துடன் தீரவும் அந்நிய பாஷை அடையாளங்களோடு நம் காரியங்களைக் கர்த்தர் பொறுப்பெடுக்க ஜெபிப்போம்.

6. I கொரிந்தியர் 7:31 இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே. எனவே இவ்வுலகத்தின் வேஷம் நம்மைத் தொடராதபடி, கிறிஸ்துவின் கிருபை நம்மை சூழ்ந்து கொள்ளவும், இம்மாதம் நாம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

### 2. நம் தேசம் கர்த்தருக்கு பிரியமாய் மாற :

1. I தீமோத்தேயு 2:2 நாம் எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம் தேசத்தின் ஆட்சியாளர்களை தேவன் ஆளுகை செய்யவும், தேசம் தேவனுக்குப் பிரியமாய் மாறவும் ஜெபிப்போம்.

2. II இராஜாக்கள் 12:15 அவர்கள் உண்மையாய் அதை நடப்பித்தார்கள். நம் தேசத்தின் அதிகாரிகள் மற்றும் பொறுப்பாளர்கள் யாவரும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கடமையை உண்மையாய் செய்யவும், இதனால் தேவ ஆசீர்வாதம் அவர்கள் மீதும் தேசத்தின் மீதும் காணப்படவும், சீக்கிரமாய் தேசம் கர்த்தரை அறிந்து கொள்ளவும் ஜெபிப்போம்.

3. எண்ணாகமம் 9:23 கர்த்தருடைய கட்டளையின்படியே, பிரயாணம் பண்ணுவார்கள். நம் தேசத்தில் உள்ள ஜனங்கள் கர்த்தரின் வேதத்தையும், வேத மகத்துவங்களை இன்னும் அதிகமாய் அறிந்து, தங்களுடைய பிரயாணங்களில் செயல்படவும், இதனால் விபத்துகள், மரணங்கள் தடுக்கப்படவும், இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் நடத்தியது போல், நம் தேசத்தையும் கர்த்தர் நடத்த ஜெபிப்போம்.

4. யாக்கோபு 4:7 பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். நம் தேசத்திற்கு விரோதமாய் கிரியை செய்யும் பிசாசின் கிரியைகள் அழிக்கப்படவும், தேவனின் கிரியைகள் பலமாய் வெளிப்படவும், இதனால் ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படவும், சமாதான வாழ்வு யாவருக்கும் கிடைக்கவும், ஜனங்களின் வருங்காலங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

5. மத்தேயு 24:14 இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகம் எங்கும் உள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாய் பிரசங்கிக்கப்பட வேண்டும். நம் தேசம் முழுவதும் வசனம் பரவவும், அதற்குரிய ஊழியர்கள் ஏராளமாய் எழும்பவும், தடைகள் நீங்கவும் ஜெபிப்போம்.

6. எசேக்கியேல் 37:14 என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன். நீங்கள் உயிரடைவீர்கள். இவ்வசனத்தின்படி, தேசம் முழுவதும் பரிசுத்த ஆவியனவர் ஊற்றப்படவும், இதனால் தேசம் தேவனுக்கு பிரியமாய் மாறவும், பிரியமற்ற காரியங்கள் அழிக்கப்படவும் இயேசுவின் வருகைக்கு தேசம் ஆயத்தப்படவும் ஜெபிப்போம்.

### 3. படிக்கின்ற மற்றும் வேலைக்காக காத்திருக்கின்ற பிள்ளைகளுக்காக:

1. ஏசாயா 54:13 உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். நம் பிள்ளைகளுக்கு படிக்கின்ற ஞானத்தையும், வேலைவாய்ப்புகளையும் கர்த்தர் கட்டளையிடவும், பிள்ளைகளின் எதிர்காலம் பிரகாசமாய் இருக்கவும் பயம் இருள் நீங்கவும் ஜெபிப்போம்.

2. பிரசங்கி 5:4 நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே. நம் பிள்ளைகள் யாவரும் தங்களை தேவனுக்கு அர்ப்பணித்து பொருத்தனை பண்ணி ஜெபிக்கவும், ஏற்றவேளையில் பண்ணின பொருத்தனையை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றவும் ஜெபிப்போம்.

3. II தீமோத்தேயு 1:7 தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். இந்த வசனத்தை வைத்து பிள்ளைகளும், பெற்றோரும், முழுக்குடும்பமும் இன்னும் அதிகமாய் ஜெபிக்கவும், பிள்ளைகளுக்குள் இருக்கும் பயத்தின் ஆவி அழியவும் ஜெபிப்போம்.

4. வெளி.2:4 ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு. நம் பிள்ளைகளை குறித்து தேவனுக்கு இருக்கும் மனஸ்தாபம் மாறவும், நம் பிள்ளைகள் தேவனிடம் நேர்வழியில் பேசவும், அவர்கள் மூலம் திரளான கூட்டம் கர்த்தரிடம் திரும்பவும், சீக்கிரம் அது நடைபெறவும் ஜெபிப்போம்

5. பிலிப்பியர் 4:6 நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் ... தேவனுக்கு தெரியப் படுத்துங்கள். நம் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்தான கவலை மாறவும், சிறப்பான எதிர்காலத்தை கர்த்தர் ஒழுங்குபடுத்திக் கொடுக்கவும் ஜெபிப்போம்.

6. I சாமுவேல் 30:19 ஒன்றும் குறைபடாமல், எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான். நம் பிள்ளைகள் மீண்டும் ஆசீர்வதிக்கப்பட்டு, இழந்துபோன படிப்பு, வேலை, இரட்சிப்பு, பணம், அபிஷேகம், குடும்ப ஐக்கியம் யாவற்றையும் மீண்டும் பெற்று சுடர்களைப் போல் பிரகாசித்து தேவநாமத்தை மகிமைப்படுத்த ஜெபிப்போம்.

## 4. எழுப்புதல் ஜெப ஐக்கிய ஊழியங்களின் வளர்ச்சிக்காக:

1. எரேமியா 3:14 நான் உங்கள் நாயகர். நான் உங்களை ஊரில் ஒருவனாகவும், வம்சத்தில் இரண்டு பேருமாக தெரிந்து, உங்களை சீயோனுக்கு அழைத்துக் கொண்டு வந்து... இந்த வசனம் நூற்றுக்கு நூறு நம் ஐக்கியத்தில் சீக்கிரமாய் நிறைவேறவும். அதற்குரிய திட்டங்களை தேவன் நமக்கு வெளிப்படுத்தவும் ஜெபிப்போம்.

2. யோபு 42:12 கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார். இந்த வசனம் ஐக்கியத்திலும், ஐக்கிய குடும்பங்களிலும் சீக்கிரமாக நிறைவேறவும், இதனால் திரளான கூட்டத்தார் ஐக்கியத்தில் சேரவும், தடைகள் மாறவும், ஜெபஆவி இன்னும் அதிகமாக ஊற்றப்படவும் ஜெபிப்போம்.

3. பிலிப்பியர் 4:11 நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக் கொண்டேன். ஐக்கியத்தின் குடும்பங்களும் மற்றும் தனிப்பட்ட விசுவாசிகளும் இவ்வசனத்தின்படி நடக்கவும், இதனால் தேவனால் அவர்கள் நன்றாகப் பயன்படுத்தப்படவும், அநேக ஆத்துமாக்கள் இன்னும் ஐக்கியத்தில் சேரவும் ஜெபிப்போம்.

4. எசேக்கியேல் 38:7 உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து. ஐக்கியத்தில் வந்து ஜெபித்து ஊழியம் செய்த யாவரையும் ஆவியானவர் கூட்டிச் சேர்க்கவும், ஐக்கியம் அவர்களுக்கு காவலாளியாய் இருக்கவும் ஜெபிப்போம்.

5. உபாகமம் 32:12 கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார். அந்நிய தேவன் அவனோடே இருந்ததில்லை. நம் ஐக்கியத்தை கர்த்தர் இவ்வசனத்தின்படியே இன்னும் நடத்தவும், இதனால் இதுவரையில்லாத அற்புதங்கள் நடைபெறவும், பிரச்சனைகள் மாறவும், பிசாசின் தந்திரங்கள் அழியவும் ஜெபிப்போம்.

6. ஆதியாகமம் 43:30 யோசேப்பின் உள்ளம் தன் சகோதரர்களுக்காகப் பொங்கினபடியால், அங்கே அழுதான். இப்படிப்பட்ட மெய்யான அன்பு ஐக்கியத்தில் யாவருக்கும் காணப்படவும், இதனால் கசப்புகள், கோபம், பொறாமை போன்ற எண்ணங்கள் யாவரையும் விட்டு விலகவும், தேவன் ஐக்கியத்தை நடத்தவும் ஜெபிப்போம்.

## 5. இயேசுவின் வருகைக்கு யாவரும் ஆயத்தப்பட:

1. மத்தேயு 9:37 அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம். தேவன் இன்னும் ஏராளமான ஊழியர்களை எழுப்பவும், அபிஷேகம் தீவிரமாய் செல்லவும், இதனால் இயேசுவின் வருகையில் ஏராளமான பேர் காணப்படவும் ஜெபிப்போம்.

2. லூக்கா 18:1 சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும். ஊரில் உள்ள அனைத்து விசுவாசிகளும் சோர்ந்து போகாமல் ஜெபம் செய்யவும், இயேசுவின் வருகை வரை நிலைத்திருக்கவும், அவர்கள் மூலம் சோர்ந்து போகாமல் பெலனடைய ஜெபிப்போம்.

3. எபிரெயர் 12:29 நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே. நம் தேவனின் கோபம் வருமுன் ஜனங்கள் தேவனை அண்டிக் கொள்ளவும், இதனால் தேசம் முழுவதும் எழுப்புதல் உண்டாகவும், இயேசுவின் வருகையில் அவர்கள் பங்கடையவும் ஜெபிப்போம்.

4. மத்தேயு 24:4 இயேசு அவர்களுக்கு பிரியுத்தரமாக, ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். விசுவாசிகள் யாரும் வஞ்சிக்கப்பட்டுவிடாதபடி தேவன் காக்கவும், இயேசுவின் வருகையை எப்போதும் நினைக்கவும் ஜெபிப்போம்.

5. Iதெச.5:22 பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். இயேசுவின் வருகை சமீபமாய் இருப்பதால், பொல்லாங்காய்த் தோன்றுகிற அனைத்தையும் விட்டு விலக ஊழியர்கள், விசுவாசிகள் இன்னும் தீவிரப்படவும், தேவனைச் சார்ந்து வாழவும் ஜெபிப்போம்.

6. அப்.19:6 அப்பொழுது அவர்கள் அந்நியபாஷை பேசி, தீர்க்கத்தரிசனம் சொன்னார்கள். இந்த அனுபவம் யாவருக்கும் கிடைக்கவும், இயேசுவின் வருகைக்கு நம்மைத் தகுதிப்படுத்தும் பரிசுத்த ஆவிக்காக ஜெபிப்போம்.

ஜுன் 2024

## தினமும் வேதத்தின் மகத்துவங்களைத் தியானித்து, ஜெபியுங்கள்.

01.06.24 சனி : ஆகாய் 1:2 இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்ற காலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். தேவனுடைய பணி மிகவும் அவசியமான பணியாகும். சரியான நேரத்தில், சரியான ஊழியத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். இன்னும் காலம் வரவில்லையென்று சாக்குப்போக்கு சொல்லாமல் நம் கையில் கொடுத்த ஊழியத்தை உண்மையாய் தொடர்ந்து செய்வோம். நோவா தன் பணியைச் சிறப்பாக செய்தது போல நாமும் செய்ய வேண்டும்.

02.06.24 ஞாயிறு : சகரியா 2:10 சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு; இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். கெம்பீரமான ஆவிக்குரிய அனுபவங்கள் நமக்கு இன்னும் அதிகம் தேவை. அப்போது தான் தேவன் நம் நடுவில் வாசம் பண்ணமுடியும். யோபு தேவனை ஆராததித்ததினால் சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு உன்னதமான ஆசீர்வாதங்களுக்கு பங்காளியானார். நம் நடுவில் கர்த்தர் எப்போதும் வாசம் பண்ண இன்னும் கவனமாய் இருப்போம்.

03.06.24 திங்கள்: மல்கியா 2:15 அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே.. என்ற வசனத்தின்படி ஆவி நம் யாவர்மேலும் பரிபூரணமாய் இறங்க இன்னும் அதிகம் ஜெபிக்கவேண்டும். அப்போது நம் மூலமாக ஆவிக்குரிய சந்ததிகளை கர்த்தர் திரளாய் எழுப்புவார். அப்போஸ்தலர்கள் யாவரும் இந்த அனுபவத்தில் இருந்ததால் ஒரே பிரசங்கத்தில் ஆயிரக்கணக்கானோர் மனந்திரும்பினார்கள்.

04.06.24 செவ்வாய் : மத்தேயு 23:12 தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். நமக்குள் இருக்கின்ற உயர்ந்த பெருமையான எண்ணங்களை ஜெபத்துடன் நம்மை விட்டு விலக்க வேண்டும். தானியேல் தன்னை தாழ்த்தினார். ஆகவே அவர் உயர்த்தப்பட்டார். நேபுகாத்நேச்சார் ராஜா தன்னை உயர்த்தினார். குறிப்பிட்ட காலத்தில் தாழ்த்தப்பட்டார். நம்முடைய குடும்பத்தில் உள்ளவர்கள் யாவரும் தாழ்மையோடு வாழ்ந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

05.06.24 புதன் : மாற்கு 3:12 தம்மை பிரசித்தம்பண்ணாதபடி அவைகளுக்குக் கண்டிப்பாய் கட்டளையிட்டார். இயேசு நமக்கு மாதிரியை வைத்துப்போனார். மிகப்பெரிய அற்புதங்கள் செய்தாலும், தன்னை யாரும் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினது இல்லை. தன்னை எல்லாவிதங்களிலும் வெளிப்படுத்தவில்லை. நாமும் இந்த மாதிரியை பின்பற்றி நம்மை நாமே உயர்த்தாமலும், பிறர் நம்மை உயர்த்துவதற்கு நாம் இடங்கொடுக்காமலும் இருக்க இன்னும் அதிகமாக இயேசுவோடு பழகிக்கொள்ள வேண்டும்.

06.06.24 வியாழன் : லூக்கா 8:12 வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர் களாயிருக்கிறார்கள்; அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான். நாம் விசுவாசிக்கும் வேத வசனங்களை பறித்துக் கொண்டுச்செல்ல சாத்தான் ஆயத்தமாய் இருக்கிறான். அவைகளுக்கு நாம் இடங்கொடாதபடி வசனங்களை இருதயத்தில் வைத்து தியானிக்க வேண்டும். யோபுவின் சிநேகிதர்கள் வசனத்தை காத்துக்கொள்ளவில்லை.

7.06.24 வெள்ளி : யோவான் 10:16 இந்தத் தொழுவத்திலுள்ளவைகளையல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். இதுவரை மனந்திரும்பினவர்களை விட இனிமேல் மனந்திரும்பப் போகிறவர்கள் ஏராளம் உண்டு. அவர்களை ஆண்டவரே அழைத்து வருவார். நாம் அந்த நாள் சீக்கிரம் வர காத்திருந்து ஜெபிக்க வேண்டும். அப்போஸ்தலர்களை நாம் முன்மாதிரியாக கொள்ள வேண்டும்.

08.06.24 சனி: அப்போஸ்தலர் 27:34 ஆகையால் போஜனம்பண்ணும்படி உங்களை வேண்டிக் கொள்கிறேன், நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும்; உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது என்றான். தன்னுடன் கப்பல்பயணம் செய்த மற்றவர்களுக்கு பவுல் தைரியம் சொன்னதுபோல நம்மோடு ஊழியம் செய்பவர்களுக்கும், உடன் பயணம் செய்கிறவர்களுக்கும் இக்கட்டான வேளைகளில் பவுல் திடப்படுத்தினதுபோல நாமும் செய்ய வேண்டும். அப்போது நம் மூலமாக அநேகர் காக்கப்படுவார்கள்.

09.06.24 ஞாயிறு : ரோமர் 4:19 அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை. ஆபிரகாம் தேவனுடைய வார்த்தைகளை உறுதியாக நம்பி ஜெபத்துடன் வசனம் நிறைவேற காத்திருந்தபடியால், பலவீனமான விசுவாசம்

அவனில் காணப்படாதபடி தேவன் காத்துக்கொண்டார். நம்முடைய விசுவாசமும் ஒரு போதும் பெலவீனப்பட்டு விடாதபடி தினசரி ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். ஒருநாள் வரும் அன்று நம்முடைய விசுவாசத்திற்குரிய பலனை தேவன் தருவார். நம் மூலமாக அநேகர் விசுவாசத்திற்குள் வருவார்கள்.

10.06.24 திங்கள் : I கொரிந்தியர் 1:27 ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமான வைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். சாதரணமான ஜனங்களை தேவன் தெரிந்துகொண்டு வல்லமையாக பயன்படுத்தும் காலம் இதுவாகும். என்னால் என்ன முடியும் என்று நம்மை நாமே குறைவாக எண்ண வேண்டாம். சாதாரண கூழாங்கல்லால் கோலியாத் வீழ்ந்ததை மறந்து போக வேண்டாம்.

11.06.24 செவ்வாய் : II கொரிந்தியர் 13:8 சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றுஞ்செய்யகூடாமல், சத்தியத்திற்கு அநுகூலமாகவே செய்யக்கூடும். தேவன் நமக்கு தந்த சத்தியத்தின்படி நாம் வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம். அப்போது நம்முடைய ஊழியத்தில் வளர்ச்சி உண்டாகும். நம்முடைய பிள்ளைகளும் சத்தியத்தில் நடப்பார்கள். பெரோயா பட்டணத்தார் போல வேதத்தை இன்னும் அதிகமாக தியானித்து சத்தியத்தை அறிந்து கொள்ளும் போது அந்த சத்தியம் நம்மை விடுதலையாக்கும்.

12.06.24 புதன் : கலாத்தியர் 4:15 அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன். ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆரம்பத்தில் உள்ள வைராக்கியம் குறையாமல் காத்துக் கொள்வது நம்முடைய கடமையாகும். இன்று நம்முடைய நிலைமையை ஆராய்ந்து பார்த்து குறைகளை சீர்ப்படுத்த வேண்டும். இளைய குமாரன் இவ்வாறு செய்ததால் பூரண நிலைக்கு வந்துவிட்டார்.

13.06.24 வியாழன்: எபேசியர் 2:1 அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். இந்த நாட்களை நினைத்து அதிகமாக தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். அதுமட்டுமல்ல இந்த அனுபவம் இல்லாதவர்களை நாம் சந்தித்து ஆண்டவருக்குள் வழிநடத்த வேண்டும். அப்போது நம் மூலமாக அநேகர் மனம் திரும்புவார்கள். நினிவே பட்டணத்து மக்கள் தங்கள் வாழ்க்கையை சிந்தித்துப் பார்த்ததால் பெரிய மனந்திரும்புதலை அவர்கள் காணமுடிந்தது.

14.06.24 வெள்ளி : பிலிப்பியர் 2:15 கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு... நாம் காண்கின்ற சந்ததி இந்த விதமாக தான் இன்று இருப்பதை நாம் காணமுடியும். எனவே தேவன் நம்மை இன்னும் பரிசுத்தப்படுத்தவும் நம்மை சார்ந்தவர்கள் பரிசுத்தமாய் வாழவும், வழிநடத்த வேண்டியது நம்முடைய பொறுப்பாகும். யோசுவா இந்தப் பணியை சரியாய்ச் செய்ததால், யோர்தானை எளிதாக கடந்து சென்றார்கள்.

15.06.24 சனி : கொலோசெயர் 4:4 திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள். உலகம் முழுவதுமுள்ள ஊழியர்கள் மூலமாக திருவசனம் இன்னும் கடந்துசெல்ல ஊழியர்களுக்காக ஜெபிக்க வேண்டியது நமது கடமையாகும். பவுல் தன்னுடைய நிருபங்களில் யார் யாருக்கு எப்படி ஜெபிக்க வேண்டும் என்று எழுதியிருப்பதை நாம் அடிக்கடி வாசித்து அதன்படி நாம் ஜெபிப்போமானால் நம்முடைய ஊழியங்களிலே நல்ல எழுப்புதல் உண்டாகும்.

16.06.24 ஞாயிறு: Iதெசலோனிக்கேயர் 3:8 நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம். இரட்சிக்கப்பட்ட அனுபவம் என்பது முடிவுபரியந்தம் நிலைத்திருக்கும் அனுபவமாகும். அவ்வாறு நாம் வாழ்ந்தால் தான் மற்றவர்களை நாம் ஆதாயம் செய்ய முடியும். நாம் சோர்ந்து போவோமானால் அநேகர் இடறிவிழுவார்கள். ஆகவே மற்றவர்களுக்காக யோபு ஜெபித்தது போல ஆத்துமாக்களுக்காக நாம் பாரமெடுத்து ஜெபிப்பதை விட்டுவிடாமல் தொடர்ந்து நடைமுறைபடுத்த வேண்டும்.

17.06.24 திங்கள் : II தெசலோனிக்கேயர் 3:2 விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே. மனுஷ குமாரன் வரும் நாட்களை நாம் எதிர்பார்த்து இருக்கிறோம். அவர் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ என்று வசனம் கூறுவதை நாம் வாசிக்கின்றோம். எனவே விசுவாசம் உள்ளவர்களாய் இருந்து நம்மோடு பழகுபவர்களை விசுவாசத்திற்குள் வழிநடத்த நாம் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்னும் அநேகரிடத்தில் விசுவாசம் இல்லாததால் அவர்களை நாம் ஒதுக்கிவிடக்கூடாது. தெபொராள் பாராக்கை வழிநடத்தினாள்.

18.06.24 செவ்வாய் : I தீமோத்தேயு 3:7 அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும். நாம் யாவரும் கர்த்தரின் ஊழியத்தை செய்ய

அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஊழியங்களில் அநேக வித்தியாசங்கள் உண்டு, ஆனால் சத்தியம் ஒன்றேயாகும். நாம் யாவரும் பிசாசின் கண்ணிகளில் விழாதபடி இன்னும் கவனமாக வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம். யூதாஸ் கடைசி நேரங்களில் விழுந்துபோனதை நாம் நினைக்க வேண்டும்.

19.06.24 புதன் : II தீமோத்தேயு 2:5 மேலும் ஒருவன் மல்யுத்தம்பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான். நமக்கு வேத வசனமே சட்ட புத்தகமாகும். ஆகவே மோசே ஜனங்களை வழிநடத்துவதற்கு தேவனிடமிருந்து கட்டளைகளையும், கற்பனைகளையும் சட்டமாக பெற்றுக் கொண்டான். அதன்படி ஜனங்களை வழிநடத்தினான். அதுபோல புதிய புதிய கருத்துக்களை சத்தியமாக நாம் யாரும் கூறாமல் இன்னும் வேதத்தின் மகத்துவங்களை அறிந்து நாம் ஊழியம் செய்ய வேண்டும்.

20.06.24 வியாழன் : தீத்து 3:10 வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு. யாவருடைய வாழ்க்கையிலும் குறைகள் காணப்படலாம். அதை பிறர் வந்து நம்மிடம் சுட்டிக்காட்டும் போது அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வோமானால் அது நமக்கு நன்மையே கொண்டு வரும். பேதுரு பலமுறை வீழ்ச்சியடைந்தாலும், தேவ ஆலோசனையை ஏற்றுக் கொண்டபடியால் பின் நாட்களில் தலைமை அப்போஸ்தலனாக தேவனால் உயர்த்தப்பட்டான். இதை நாம் மறந்து போய்விடக்கூடாது.

21.06.24 வெள்ளி : பிலேமோன் 1:25 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூட இருப்பதாக. தேவ கிருபையும், தேவ ஆவியும் ஒவ்வொரு விசுவாசிக்கும், இன்னும் அவசியம் தேவையாகும். இவைகள் இருந்தால் மட்டுமே இன்னும் நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்க முடியும். அவர்கள் நிருபங்கள் அனைத்திலும் இப்படிப்பட்ட வாழ்த்துதல் இருப்பதை நாம் காண்கிறோம். இந்த கிருபைகள் தொடர்ந்து நமக்கு கிடைக்க கர்த்தரை முழுமையாக இன்னும் சார்ந்து வாழ வேண்டும்.

22.06.24 சனி : எபிரெயர் 2:4 இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானல் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். இரட்சிக்கப்படாதவர்கள் யாவரும் தேவ தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று வேதம் கூறுகின்றது. நாம் இன்னும் தீவிரமாய் ஊழியம் செய்து இரட்சிக்கப்படாதவர்களை இரட்சிப்பிற்குள் வழி நடத்த வேண்டும். இப்படிச் செய்யும் போது அவர்களுக்கு தேவ தண்டனை கிடையாது. இந்த ஊழியம் செய்ய பேதுருவை போல் நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

23.06.24 ஞாயிறு : யாக்கோபு 1:19 ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள். இந்த வசனத்தின்படி வாழ முடியாதபடி அநேக சூழ்நிலைகள் நமக்கு எதிராக வரும். அப்படி வரும்போது யோபு, தானியேல், எலியா போன்ற பரிசுத்தவான்களை போல நாம் நம்மை காத்துக்கொள்ள வேண்டும். அப்போது தேவன் நமக்கு மிகுந்த கிருபைகளை தருவார். அப்போது நம் வாழ்வு இன்னும் உயரும்.

24.06.24 திங்கள் : I பேதுரு 1:7 அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். விசுவாசத்திற்கு ஈடுயிணையானது வேறொன்றுமில்லை. இந்த விசுவாசத்தை தேவன் நமக்கு தந்துள்ளார். நாம் இந்த விசுவாசத்தை வேத வாசிப்பு மூலமாகவும், ஜெபிப்பது மூலமாகவும் இன்னும் அதிகமாக தாவீதைப்போல பெருக்கிக் கொள்ள வேண்டும்.

25.06.24 செவ்வாய் : II பேதுரு 3:10 கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். கர்த்தருடைய வருகையின் நாளில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறும். இவைகளுக்கு நாம் தப்பி வாழ வேண்டும். அதற்கு இப்போதே நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். அப்போது கர்த்தருடைய வருகை நாளில் கைவிடப்படக்கூடாது. புத்தியில்லாத 5 கன்னிகைகள் கைவிடப்பட்டார்கள்.

26.06.24 புதன்: I யோவான் 2:17 தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். நாம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கவேண்டுமானால் தேவனுடைய சித்தத்தை அறிந்து செயல்படுத்த வேண்டும். வேத வசனத்தின்மூலமாக நாம் தேவ சித்தத்தை அறிந்து கொள்ள முடியும். பவுல் தேவ சித்தத்தை தெளிவாக அறிந்து முடிவுபரியந்தம் நிலைத்து நின்றதுபோல நாம் நமது படிப்பிலும், தொழிலும், திருமணத்திலும், ஊழியத்திலும் தேவ சித்தம் அறிந்து செய்ய வேண்டும்.

27.06.24 வியாழன் : II யோவான் 1:4 பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். இதை போல

நம்முடைய பிள்ளைகளும் சத்தியத்தில் நடப்பதைக் கண்டு நாம் சந்தோஷப்படவேண்டும். அதற்கு வேண்டிய கிருபைக்காக இன்னும் ஜெபிக்க வேண்டும். சாலொமோன் ராஜா சத்தியத்தில் நடப்பதைக் கண்டு அவர் தகப்பனாகிய தாவீது சந்தோஷப்பட்டார். இந்த சந்தோஷத்தை தேவன் நமக்குத் தருவார்.

28.06.24 வெள்ளி : III யோவான் 1:11 தீமை செய்கிறவன் தேவனைக் காணவில்லை. யோசேப்புடைய சகோதரர்கள் யோசேப்புக்கு தீமை செய்தபடியால், அவர்களால் தேவனைக் காணமுடியவில்லை. அதுபோல நாம் இன்னும் நம்மில் காணப்படும் தீமையான செயல்பாடுகளை நம்மை விட்டு விலக்கினால் தான் நாம் தேவனை காண முடியும். அப்படி செய்யாமல் கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லித் தீமையை செய்து கொண்டிருப்போமானால் ஒருபோதும் தேவனை காணமுடியாது. இது நமக்கும் ஒரு கடைசிக்காலம்.

29.06.24 சனி : யூதா 1:5 கர்த்தர் தமது ஜனத்தை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார். நாம் வாழ்கின்ற இந்த உலகத்தில் நம்மிடமுள்ள விசுவாசத்தை இழப்பதற்கு அநேக வழிமுறைகளை நாம் காண்கிறோம். கானான் தேசத்தை சுற்றிப்பார்த்து வந்த 12 பேரில் 10 பேர் விசுவாசத்தை இழந்து போய்விட்டார்கள். ஆகவே அவர்களும் அவர்கள் சந்ததிகளும் அழிந்து போனார்கள். இப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலை யாருக்கும் வராதபடி நம்மை நாமே காத்துக்கொள்வோமாக.

30.06.24 ஞாயிறு : வெளிப்படுத்தல் 3:8 இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். இந்த சத்திய வசனத்தை யாராலும் மாற்ற முடியாது. ஊழியர்களாகிய நம் அனைவருக்கும் திறந்த வாசலைத் தேவன் வைத்திருக்கிறபடியால், சோர்ந்து போகாமல் ஜெபத்துடன் தேவபணியை எலியா, எலிசா போன்றவர்கள் செய்ததுபோல நாமும் செய்ய நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அர்ப்பணிக்க வேண்டும். ஆவியானவர் நம் குடும்பத்தின் மேல் இரங்குவார். ஆமென்.

## ஏப்ரல் மாத ஊழியப் பகிர்மானங்கள்

1. 04-04-24 புதன்கிழமை, கடைசிக்கால அபிஷேக ஜெபம், சுரண்டை
2. 07-04-24 ஞாயிற்றுக்கிழமை, பாவூர்சத்திரம், ஷாலோம் ஸ்கூல், சிறப்பு ஜெபம்
3. 08-04-24 திங்கள்கிழமை, கன்னியாகுமரி, குடும்ப கூடுகை
4. 12-04-24 - வெள்ளிக்கிழமை, மருதுபுரம், காத்திருப்பு ஜெபம்
5. 13-04-24 - சனிக்கிழமை, உபவாச ஜெபம், ஜெபக்கூடாரம், சுரண்டை
6. 14,15-04-24 - ஞாயிற்றுக்கிழமை, திங்கள்கிழமை, சென்னை ஊழியங்கள் - பல இடங்களில்
7. 15-04-24 திங்கள்கிழமை, தென்காசி, குடும்ப கூடுகை
8. 17-04-24 - புதன்கிழமை, சிறப்பு காத்திருப்பு ஜெபம்
9. 21-04-24 - ஞாயிறு, சிவகாசி, சாந்தி நகர், கல்லிடைக்குறிச்சி, ஊத்துமலை குடும்ப கூடுகை
10. 22-04-24 - திங்கள்கிழமை கடையம் குடும்பகூடுகை
11. 24-04-24 - புதன்கிழமை, பௌர்ணமி ஜெபம், ஜெபக்கூடாரம், சுரண்டை
12. 28-04-24 - ஞாயிற்றுக்கிழமை, இடையன்குடி அருள் நகர் ஆராதனை,
    ஆண்கள் மினி முகாம் ஜெபக்கூடாரம்
13. 30-04-24 - செவ்வாய்கிழமை, ஸ்தோத்திர ஜெபம் & புதிய மாத விண்ணப்ப ஜெபம்
14. 01-05-24 - புதன்கிழமை, கடைசிக்கால அபிஷேக ஜெபம்
15. 02,03,04-05-24 - புதன்கிழமை, 45வது கூடுகை, ஆண்கள் முகாம்
16. 05-05-24 - ஞாயிற்றுக்கிழமை, பாவூர்சத்திரம், ஷாலோம் ஸ்கூல், சிறப்பு ஜெபம்

மேற்கண்ட அனைத்து ஊழியங்களிலும் ஆவியானவர் கிரியை செய்தார்.
தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

பெண்கள் பகுதி

## பஞ்சக்காலத்தில் திருப்தியாக வாழ்ந்த சாறிபாத் விதவை I இராஜா 17:15

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதத்தில் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதத்திலே மிகவும் வறட்சியான பஞ்சக்காலத்தில் திருப்தியான வாழ்க்கை வாழ்ந்த சாறிபாத் விதவையைப் பற்றித் தியானிப்போம்.

சாறிபாத் விதவையை பற்றி வேதத்திலே I இராஜாக்கள் 17:9 முதல் 24 வரை கூறப்பட்டுள்ளது. எலியா தீர்க்கதரிசியின் காலத்தில் மூன்று வருஷமும் ஆறு மாதமும் மழை பெய்யாதிருந்தது. முதலாவது அவர் கேரீத் ஆற்றண்டையில் இருந்தார். காகங்கள் அவருக்கு அப்பமும், இறைச்சியும் கொண்டு வந்து கொடுத்தது, அந்த ஆற்று நீர் வற்றிய பின்னர் சாறிபாத் ஊர் விதவையினிடத்தில் அனுப்பப்பட்டார். பஞ்சக் காலம் முடியும் வரை திருப்தியான உணவு எலியாவுக்கும் அவள் குடும்பத்தாருக்கும் கொடுக்கப்பட்டது. அதற்கு அவளிடம் காணப்பட்ட குணங்களைத் தியானிப்போம்

### முதலாவதாக தன் நிலைமையை அப்படியே சொன்ன சாறிபாத் விதவை : I இராஜா. 17:12

சாறிபாத் விதவை எலியாவைப் பார்த்து பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இதோ நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப் போக. அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துவதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள். எலியா சாறிபாத் விதவையிடம் தண்ணீரும் அடையும் கேட்ட உடனே அவள் தன்னுடைய எல்லா நிலைமையையும் அப்படியே கூறுகிறாள். உடனே தீர்க்கத்தரிசி முதலாவது எனக்கு அடையைக் கொண்டு வா மழை பெய்யுமட்டும் உன் பானையில் மாவும், கலயத்தில் எண்ணெயும் குறைவதில்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார். அதுபோலவே நடந்தது. ஊழியரும், விதவையின் வீட்டார் அனைவரும் பஞ்சக்காலம் முழுவதும் திருப்தியாக சாப்பிட்டார்கள். நாமும் நம் நிலைமையை இயேசுவிடத்திலும், உண்மையான ஊழியரிடத்திலும் உள்ளபடியே சொல்லும் பொழுது கர்த்தர் நம்மையும் திருப்தியாக நடத்துவார். நம் உண்மை நிலையை மறைக்காமல் அப்படியே இயேசுவிடம் சொல்லுவோம். அவர் நம்மை திருப்தியாக நடத்துவார்.

### இரண்டாவதாக கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு சொன்ன சாறிபாத் விதவை : I இராஜா. 17:12

சாறிபாத் விதவை எலியாவைப் பார்த்து பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் அல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்கிறேன். என் பாடு இதுதான் என்று தன் சுயத்தில் சொல்லாதபடிக்குக் கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்கிறேன் என்கிறாள். இவள் கர்த்தரையும், அவருடைய தீர்க்கத்தரிசியையும் அறிந்திருக்கிறாள். சங்கீதம் 91:14ன்படி என்னுடைய நாமத்தை அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன் என்பதற்கிணங்க, அவர் நாமத்தைச் சொல்லி தீர்க்கத்தரிசியிடம் பேசுகிறாள். அதனாலே அவளுடைய பிரச்சனை தீர்ந்து உயர்ந்த ஆசீர்வாதமாகிய திருப்தியான உணவும், ஆசீர்வாதமும் கிடைத்தது. நம் கஷ்டங்கள், தேவைகள் எதுவானாலும் அவருடைய நாமத்தைக் கொண்டே கேட்கும் பொழுது நம்மையும் தேவன் திருப்தியாக நடத்த முடியும். கர்த்தரின் நாமத்தைக் கொண்டு தன் குறைவை அப்படியே தீர்க்கதரிசியிடம் கூறுகிறாள். எலியா நீ சொல்கிறது மெய்தான் ஆனாலும் எனக்கு ஒரு அடையை ஆயத்தப்படுத்து பஞ்சக்காலம் முழுவதும் உன் பானையில் மாவும், கலயத்தில் எண்ணெயும் குறைவதில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கொண்டு சொல்கிறேன். அவர் வார்த்தையின்படியே நடந்தது. நாமும் கர்த்தரின் நாமத்தைக் கொண்டு கேட்டு திருப்தியான ஆசீர்வாதத்தைப் பெறுவோம். ஆமென்.

### மூன்றாவதாக எலியாவின் வார்த்தையின்படியே செய்த சாறிபாத் விதவை : I இராஜா 17:15

அந்த விதவை போய் எலியாவின் சொற்படி செய்தாள். அந்தத் தீர்க்கதரிசி சொன்ன வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிந்து செயல்பட்டாள். அவளும், தீர்க்கதரிசியும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். ஒரு திருப்தியான ஆசீர்வாதம் பெறுவதற்குக் காரணம் ஒரு முழுமையான கீழ்ப்படிதல் ஆகும். அது எப்படி நடக்கும் ஒரு பிடி மாவும், கொஞ்சம் எண்ணெயும் தானே இருக்கிறது என அவிசுவாசப்படாமல் தீர்க்கத்தரிசி சொன்ன வார்த்தையை நம்பிக் கீழ்ப்படிந்தாள். இவளுடைய முழுமையான கீழ்ப்படிதல், அர்ப்பணிப்பு அவளும், தீர்க்கதரிசியும், அவள் வீட்டார் அனைவரும் பஞ்சக்காலம் முடியும் வரை திருப்தியாக சாப்பிட்டார்கள். இதைவிடப் பெரிய அற்புதம் என்னவென்றால் வியாதியினால் மரித்துப்போன அவள் குமாரனும் உயிரோடே எழுப்பப்பட்டான். நாமும் முழுமையான கீழ்ப்படிதலோடு வாழ்ந்து ஒரு பெரிய அற்புதத்தையும், திருப்தியான ஆசீர்வாதத்தையும் பெறுவோம். கர்த்தருடைய வார்த்தைக்கும், ஊழியரின் ஆலோசனைக்குக் கீழ்ப்படிவோம்.

பஞ்சக்காலத்தில் திருப்தியாக வாழந்த சாறிபாத் விதவையைப்போல நம் நிலைமையை அப்படியே கர்த்தரிடமும் உண்மையான ஊழியரிடம் சொல்லுவோம். அடுத்து கர்த்தரின் நாமத்தைக் கொண்டு சொல்லுவோம். அடுத்து ஊழியரின் சொற்படி அப்படியே கீழ்ப்படிந்து செயல்படுவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து மேலான அற்புதங்களை செய்வார். ஆமென்! அல்லேலூயா!

எழுப்புதல் ஜெப ஐக்கியம், சுரண்டை.

## வேதாகமம் கூறும் கடைசிக்கால சம்பவங்கள்

### ஆசியாவிலிருக்கிற பிலதெல்பியா சபை. வெளி. 3:7-13

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆசியாவிலிருக்கிற சபைகளுக்குள் பிலதெல்பியா சபையின் நிலைமையையும், இதன் நடுவில் நாம் எப்படியிருக்க வேண்டும் என்பதையும், நம்முடைய குடும்பம், நமது ஊழியங்கள் யாவும் எப்படியிருக்க வேண்டும் என்பதைப்பற்றி வெளி.3:7-13 வசனங்கள் வரை நாம் ஜெபத்துடன் தியானிப்போம். பரிசுத்த ஆவியானவர் நம்மோடுகூட இருந்து வசனத்தை விளக்கிக் காட்டுவாராக ஆமென்.

ஆவியானவர் நம்முடைய கிரியைகளை அறிந்தவராய் இருக்கின்றார். நாம் செய்யும் எல்லா பணியையும் தேவன் அறிவார். நாம் ஊழியம் செய்தாலும், நாம் தொழில் செய்தாலும் அல்லது குடும்பப் பொறுப்பில் இருந்தாலும், நாம் அதை எப்படிச் செய்கிறோம் என்பதை ஆவியானவர் அறிந்திருக்கிறார். நமக்கு கொஞ்சம்தான் பெலன் உண்டு என்பதையும் ஆவியானவர் அறிவார். அந்த சூழ்நிலையில் தேவ நாமத்தை மறுதலியாமலும், அவரது வசனம் என்ன சொல்லுகின்றதோ அதைவிட்டு விலகாமல் நாம் நடந்ததையும் தேவன் அறிந்திருக்கின்றார். இவ்விதமாக நாம் இருக்கும்போது, இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான் என்று வேதம் கூறுகின்றது வெளி.3:8

இச்செய்தியைத் தியானிக்கும் நமக்கு கொஞ்சம் பெலன்தான் உண்டு என்று ஆவியானவர் அறிந்திருக்கிறார். அதன் மத்தியில் நாம் தேவனுக்கு சாட்சியாக வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம். அவ்வாறு வாழும்போது, யாராலும் அடைக்க முடியாத திறந்த வாசலை தேவன் நமக்கு முன்பாக வைத்து நம்மை நடத்துவதைக் காணலாம். தேவன் தந்த நிலையில் நாம் மனரம்மியமாய் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இருக்கின்ற பொறுப்பில் உண்மையாயிராமல் கூடுதல் பொறுப்பு அல்லது பதவிகள் வேண்டும் என்று கேட்பதும், நினைப்பதும் நமக்கு எந்தவித ஆசீர்வாதத்தையும் கொண்டு வராது. இருக்கின்ற சூழ்நிலையில் உண்மையாய் வாழ இன்னும் கற்றுக் கொள்ள பிரயாசப்படுவோம். அதற்காக ஜெபிப்போம் தேவன் காரியத்தை வாய்க்கச் செய்வார் ஆமென்.

திறந்த வாசலை நமக்குத் தரும் தேவன் இன்னும் விசேஷித்த வழி நடத்துதலையும் நமக்கு தரயிருக்கிறார். அது என்னவென்றால் நமக்கு இடையூறாக இருந்த சாத்தான் கூட்டத்தாரில் சிலரை நம்முடைய கையில் ஒப்புக் கொடுப்பார். நம்மை எதிர்த்து நின்ற சாத்தானை நாம் ஆளுகை செய்யப்போகிறோம். அந்த சாத்தான் கூட்டத்தார் நம்முடைய பாதங்களுக்கு முன்பாக பணிந்து, தேவன் நம் மேல் அன்பாய் இருப்பதை அவனுக்கு உணர்த்துவார் (வெளி.3:9). அன்பானவர்களே, கொஞ்ச பலத்தில் உண்மையாய் இருக்கும்போது, சாத்தானை நாம் மேற்கொண்டு வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்ய தேவன் நமக்கு கிருபை செய்வார். எனவே இனி சாத்தான் என்னை சோதிப்பானோ என்று கவலைப்பட வேண்டாம். சாத்தானை ஜெயிக்க நமக்கு பெலன் கொடுத்துவிட்டார். நாம் தேவபெலத்தை உறுதியாய்ப் பற்றிக் கொண்டால் அதுவே போதுமானதாகும். தேவனே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். நம் தேவன் நல்லவர் ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார். தேவனை உறுதியாய்ப் பற்றிக் கொள்வோம். ஆமென்.

திறந்த வாசலையும், சாத்தானின் கூட்டத்தையும் நம்முடைய ஆளுகைக்குள் கொண்டு வர தேவன் இன்னும் நம்மை வழிநடத்துவார். சோதனை காலத்தில் நம்மைப் பாதுகாத்து நம்மை காக்கும் தேவனாய் இருக்கின்றார் (வெளி.3:10) சோதனைகள் யாவருக்கும் உண்டு. தேவன் யாவரோடும் இருக்கிறார். நம்மை தேவன் பாதுகாத்து சாத்தான் சோதனையில் விழாதபடி நம்மைக் காக்கின்றார். தேவனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் சோதனையில் விழுந்து போய் அழிந்து விடுவார்கள். எனவே நமக்கு கொஞ்சம் பெலன் இருந்தாலும் அதைக் காத்துக்கொள்ள வேண்டும். தேவனை முறுமுறுக்கவோ, பின்வாங்கிப் போகவோ கூடாது. நமக்கு எப்பேர்ப்பட்ட சோதனை வரும் என்பதை தேவன் அறிவார். நம்மை நிச்சயம் காப்பார்.

வேதத்தில் யோசேப்பு என்ற தேவ ஆவி பெற்ற மனிதனைப் பார்க்கும் போது, தனக்குரிய கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தபடியால் திறந்த வாசல் ஆசீர்வாதத்தையும், சாத்தானின் சூழ்ச்சியிலும், சோதனை காலத்தில் தப்பிக்கொள்ளும்படி ஆசீர்வதிக்கப்பட்டான். அவரைப்போல் நாம் கிறிஸ்துவின் நாமத்தை மறுதலியாமல் வாழவும், பெரிய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ளவும் முடியும். எனவே நாம் இதுவரை ஜாக்கிரதையாய் இருந்தது போல, இன்னும் ஜாக்கிரதையாய் இருந்து, இயேசுவின் வருகை வரை உண்மையாய் சாட்சியாய் ஜீவிக்க பிரயாசப்படுவோம். நாம் தேவனுக்கு முன்பாக உண்மையாய் இருக்கும்போது, நம்மை ஜெயங்கொள்கிறவர்களாக தேவன் மாற்றுவார். நாம் ஜெபித்து செய்யும் அத்தனை வேலைகளையும் தேவன் ஆசீர்வதிப்பார். தேவனுடைய ஆலயத்திலே நாம் தூண்கள் என்றும் அதினின்று நாம் ஒருக்காலும் நீங்குவதில்லை (வெளி.3:12) என்று நமக்கு தேவன் வாக்குக் கொடுக்கிறார். எந்தச் சூழ்நிலையிலும் தேவன் நம்மைக் காத்து நடத்துவார். இன்னும் தேவன் நம்மோடு பேசுவார்.

இதுவரை நம்மை நடத்திய தேவன் இன்னும் நம்மை நடத்த தேவ கிருபைக்காக ஜெபிப்போம். நம்மிடம் உள்ள குறைகளை கண்டுபிடித்து ஆவியானவர் நடத்துவதற்கு ஒப்புக்கொடுப்போம். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## 45வது ஆண்கள் தியான முகாம் அறிக்கை

தேவனின் பெரிதான கிருபையாலும், இரக்கத்தாலும் 44வது ஆண்கள் தியான முகாமை ஆசீர்வாதமாக நடத்திய தேவன் 45வது ஆண்கள் தியான முகாமையும் மே 2,3,4 ஆகிய நாட்களில் ஆசீர்வாதமாய் நடத்தித் தந்தார்.

ஆண்கள் அநேகர் முகாமில் கலந்து கொண்டார்கள். ஒரு மனமாய் ஆண்கள் காலை தொடங்கி மாலை வரை ஜெபிக்கும் ஜெபநேரமாய் கர்த்தர் நடத்தித் தந்தார். கலந்து கொண்ட ஆண்கள் தங்களை முழுமையாக கர்த்தருக்கு அர்ப்பணித்தனர். கர்த்தர் கலந்து கொண்ட ஆண்களை வரும் நாட்களில் வல்லமையாய் வழி நடத்துவார். அழைத்த ஊழியர்களை குறிப்பாக சகோ. **T.சாம் அற்புதராஜ்** அண்ணனை கர்த்தர் நன்றாகப் பயன்படுத்தினார். கலந்து கொண்ட மற்றும் ஜெபித்த, உழைத்த யாவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

**குறிப்பு :**

1. ஐக்கியத்திற்காய் அதிகம் ஜெபித்து, ஊழியத்தில் பங்கு பெறுங்கள்.
2. பத்திரிக்கையை அநேகருக்கு அறிமுகம் செய்யுங்கள்.
3. உங்கள் செல்போன் எண்ணை ஐக்கியத்திற்குத் தெரிவியுங்கள்.
4. உங்கள் பிரச்சனைகளுக்காக ஜெபிப்போம்
5. உங்கள் ஜெபம் ஐக்கியத்திற்கு தினமும் தேவை.
6. தேவன் உங்களை அழைத்தால் ஐக்கிய ஊழியங்களை உங்கள் பகுதியில் செய்யுங்கள்.
7. இம்மாதம் அனைத்து ஊழியங்களும் அபிஷேகத்துடன் நடைபெறும்.
8. ஐக்கியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் பிறரையும் இரட்சிப்பிற்குள் வழி நடத்துங்கள்.
9. எழுப்புதல் TV என்ற சேனல் முகவரியில் YOU TUBE ஊழியம் நடைபெற்று வருகின்றது

**தொடர்புக்கு:**

**90255 53614, 99429 50132**

## நடப்புச் செய்திகள்.

1. ஐசிசி உலக கோப்பை டி20 தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ரோகித் ஷர்மா தலைமையிலான அணியில் விக்கெட் கீப்பர் / பேட்ஸ் மேன் கே.எல்.ராகுலுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.
2. ஊட்டி மற்றும் கொடைக்கானல் செல்ல இ-பாஸ் கட்டாயம் என்று நீதிமன்றம் நேற்று அறிவித்ததை தொடர்ந்து, தமிழக அரசு விரைவில் வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட திட்டமிட்டுள்ளது.
3. கடற்படை தளபதி ஹரிகுமார் பணியில் இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, 26வது கடற்படை தளபதியாக அட்மிரல் தினேஷ்குமார் திரிபாதி பொறுப்பேற்றுக் கொண்டார்.
4. அமெரிக்காவில் கடந்த ஆண்டு காலிஸ்தான் தீவிரவாதி குர்பத்வந்த் சிங்பன்னுனை கொல்ல முயற்சி நடந்தது. இதற்கான சதியில் இந்திய உளவுத்துறையான ரா பிரிவு அதிகாரி விக்ரம் யாதவ் ஈடுப்பட்டதாக அமெரிக்கா நாளிதழ் வாஷிங்டன் போஸ்ட் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டது.
5. கனடாவில் கல்வி கற்பதற்காக வரும் இந்திய மாணவர்கள் உட்பட வெளிநாட்டு மாணவர்களில் பெரும்பாலானோர் அங்கு பகுதி நேர வேலை செய்வார்கள். சர்வதேச மாணவர்கள் வாரம் ஒன்றுக்கு 20 மணி நேரத்துக்கு மேல் வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படும் தற்காலிக கொள்கை நேற்று முடிவுக்கு வந்தது. இது மேலும் நீடிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வருகின்ற செப்டம்பர் முதல் வெளிநாட்டு மாணவர்கள் பணியாற்றும் நேரத்தை வாரத்திற்கு 24 மணி நேரமாக மாற்றுவதற்கு முடிவு செய்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.
6. ஆப்கானிஸ்தானின் மேற்கு பகுதியில் உள்ள ஹெறாத் மாகாணம் குசாரா மாவட்டத்தில் உள்ள ஷியா பிரிவினர் மசூதியில் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியுடன் நுழைந்துள்ளார். அவர் சரமாரியாக சுட்டத்தில் மசூதியின் இமாம் உட்பட தொழுகையில் இருந்த 6 பேர் கொல்லப்பட்டனர்.
7. உத்திரப்பிரதேசத்தின் லக்னோவில் மாவட்ட சிறையில் இருந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபடுவதற்காக 9 பெண் கைதிகள் அழைத்து செல்லப்பட்டனர். பாதுகாப்புக்காக 14 பெண் காவலர்கள் உடன் சென்றனர். இந்நிலையில் ராஜ்பவன் அருகே வேன் சென்றபோது திடீரென தீப்பிடித்தது.
8. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆபாச நடிகை ஸ்டோர்மி டேனியல்சுக்கு பணம் வழங்கியதை மூடிமறைத்த குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

## “உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே...” ரோமர் 1:8

## உலகமெங்கும் உள்ள விசுவாசிகள் கோதுமை மணியாய் மாற... ரோமர் 12:24

1. எஸ்தர் 4:14 நீ இந்தக் காலத்தில் மவுனமாய் இருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். மொர்தெகாய் கோதுமை மணியாய் மாறி, அனைவருக்கும் பயன்பட்டது போல, உலகமெங்கும் உள்ள விசுவாசிகள் கோதுமை மணியாய் இன்னும் மாறவும், அவர்கள் ஆவிக்குரிய ஜனங்களாக மாறவும், நமக்காகவும் ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.
2. எஸ்தர் 4:16 நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம். எஸ்தர் உபவாசம் இருந்து ஜெபித்து, யூதர்களைக் காப்பாற்றி, தன்னை கோதுமை மணியாய் மாற்றிக்கொண்டது போல, நாம் எஸ்தரைப் போல கோதுமை மணியாய் இன்னும் மாறி, திரளான ஜனங்களை இரட்சிக்கவும், உலகளவில் விசுவாசிகளுக்குள் ஆவிக்குரிய எழுப்புதல் இன்னும் உண்டாக ஜெபிப்போம்.
3. அப்போஸ்தலர் 3:7 வலது கையால் அவனைப் பிடித்து தூக்கி விட்டான். தேவ வசனம் பேதுரு மூலம் பிறவிச் சப்பாணிக்குள் சென்றதுபோல, நம் வாழ்வில் நடைபெறவும், நம் யார் மூலமாயும் தேவ வல்லமை உலகில் செல்லவும், பேதுரு கோதுமை மணியாய் மாறியது போல் நாமும் கோதுமை மணியாய் மாறி, பெரிய எழுப்புதல் கர்த்தர் செய்ய ஜெபிப்போம்.
4. அப்போஸ்தலர் 9:6 அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாய் இருக்கிறீர் என்றான். பவுல் ஓர் கோதுமை மணியாய் மாறி, தேவ சித்தம் செய்தது போல, ஊழியர்களும், விசுவாசிகளும் கோதுமை மணியாய் மாறி, தேவசித்தம் செய்யவும், பவுலைப் போல ஏராளம் திருச்சபைகளை எழுப்பவும், தேவன் கிரியை செய்ய ஜெபிப்போம்.
5. ரூத் 1:16 உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன். ரூத் ஓர் கோதுமை மணியாய் மாறி, சாதாரண நிலையிலிருந்து உன்னத நிலைக்கு தேவனால் உயர்த்தப்பட்டது போல யாவரும் மாறவும், ரூத்திடம் காணப்பட்ட ஞானமான வார்த்தை யாவருக்கும் இன்னும் காணப்படவும், கர்த்தர் கோதுமை மணிகளை இன்னும் வழிநடத்தவும் ஜெபிப்போம்.
6. ஆதியாகமம் 50:20 வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, தேவன் அதை நன்மையாக முடியப் பண்ணினார். யோசேப்பு ஓர் கோதுமை மணியாய் மாறி பிற தேசங்களுக்கும் ஆசீர்வாதமாக காணப்பட்டது போல, அனைத்து விசுவாசிகளும் கோதுமை மணியாய் இன்னும் மாறி, வசனமாகிய ஆவிக்குரிய உணவை உலகமெங்கும் கொடுக்க ஜெபிப்போம்.
7. யாத்திராகமம் 3:3 நான் கிட்டப்போய் இந்த அற்புதக் காட்சியை பார்ப்பேன் என்றான். மோசே ஓர் கோதுமை மணியாய் மாறி, அற்புதக் காட்சியாகிய தேவனைக் கண்டது போல, விசுவாசிகள் மோசே போல கோதுமை மணியாய் இன்னும் மாறவும், திரளான ஜனங்களை மோசே வழி நடத்தினது போல, விசுவாசிகள், ஊழியர்கள் இன்னும் மாற ஜெபிப்போம்.
8. யோசுவா 14:8 நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினேன். காலேப் ஓர் கோதுமை மணியாய் மாறி, தேவனை உத்தமமாய் பின்பற்றியது போல, அனைத்து ஊழியர்களும் மாறவும், யாவரையும் கர்த்தர் இன்னும் பயன்படுத்தவும், இதனால் உலகமே தேவனுக்கு பின் செல்ல ஜெபிப்போம்.
9. நியாயாதிபதிகள் 4:4 அக்காலத்திலே, லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கத்தரிசியானவள், இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள். கோதுமை மணியாகிய தெபொராள் ஜனங்களை நியாயம் விசாரித்தது போல, உலகமெங்கும் உள்ள சகோதரிகளும் கோதுமை மணியாய் என்றும் மாற ஜெபிப்போம்.
10. Iசாமுவேல் 17:32 தாவீது சவுலை நோக்கி, இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை. கோதுமை மணியாய் மாறி, இவ்விதமான தேவ வார்த்தையை தைரியமாய் தாவீது சொன்னதுப் போல, அனைத்து விசுவாசிகளும் சமயத்திற்கு ஏற்ற வார்த்தையை கூறவும், இதனால் யாவரின் காரியம் ஜெயமாய் மாற ஜெபிப்போம்.
11. II நாளாகமம் 20:15 இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. யகாசியேல் என்னும் தேவ மனிதன் கோதுமை மணியாய் மாறி, யோசபாத் ராஜாவுக்கு திடனான தேவ வார்த்தையைக் கூறியது போல, அனைத்து விசுவாசிகளும் இப்படி மாறி, அவர்கள் பேசும் வார்த்தைகள் யாவும் தீர்க்கத்தரிசனமாய் காணப்படவும், அவ்வார்த்தை அப்படியே நடக்கவும் ஜெபிப்போம்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்**, சுரண்டை.

## நாம் குடியிருக்கும் இடத்தையும் ஆசீர்வதிக்கும் அபிஷேகம் - 137 II இராஜாக்கள் 2:19-22

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,** இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள அபிஷேகம் இன்னும் நமக்கு அதிகம் தேவை. அவைகளை இன்னும் அதிகமாய் நமக்குக் கொடுக்க தேவன் பிரியமாய் இருக்கிறார். நாமும் பிரியமுள்ளவர்களாய் அபிஷேகத்திற்காக ஜெபிக்க வேண்டும். II இராஜாக்கள் 2:19 -22 ம் வசனங்கள் வரை வாசித்துப் பார்க்கும் போது, எலிசா தீர்க்கன் மேல் உள்ள அபிஷேகம் அவன் குடியிருந்த இடத்தையும், ஜனங்கள் குடியிருந்த இடத்தை ஆசீர்வதித்ததையும், அதில் உள்ள சாபங்களை நீக்கியதையும் நாம் காண முடியும். கர்த்தர் நமக்கும் இப்படிச் செய்யப் போகிறார். இச்செய்தியில் தொடர்ந்து தியானிப்போம்.

எலிசா தீர்க்கன் இரண்டு மடங்கு ஆவியின் வரங்களோடு ஊழியத்தைத் தொடங்கினார். கர்த்தர் அவரை மிகவும் ஆசீர்வாதமாய் பயன்படுத்தினார். எலிசா குடியிருந்த பட்டணத்து மனுஷர் எலிசாவிடம் வந்து, இதோ, எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்த பட்டணம் குடியிருப்புக்கு நல்லது. தண்ணீரோ கெட்டது. நிலமும் பாழ்நிலம் என்று அந்த பட்டணத்து நிலைமையை விளக்கிக் கூறினர்கள். தண்ணீர் கெட்டது என்று கூறும்போது, அது சபிக்கப்பட்ட இடமாகத்தான் இருந்திருக்கும். ஜனங்கள் குடியிருக்கக்கூடாத இடமாகவும் காணப்பட்டது. இந்த இடத்தின் நிலையை எலிசா கேட்டவுடன், தேவ அபிஷேகம் எலிசா மூலம் கிரியைச் செய்கிறது. எப்படியென்றால், ஒரு புதுத் தோண்டியை எடுத்து, அதிலே உப்புப் போட்டு கொண்டு வாருங்கள் என்றான்; அதை அவனிடத்தில் கொண்டு வந்துபோது, அவன் நீருற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு, இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். எலிசா சொன்ன வார்த்தையின்படி, அந்தத் தண்ணீர் இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று. அல்லேலூயா! எலிசாவுக்குள் இருந்த அபிஷேகம் ஜனங்கள் குடியிருக்கும் இடத்தையும் ஆசீர்வதிக்கும், தண்ணீரும் ஆரோக்கியமானதால் ஜனங்கள் குடியிருப்பதற்கு போட்டிப்போட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த ஆசீர்வாதம் அபிஷேகம் மூலம் வருகிறது.

இந்த நாட்களில் சிலர் சில குறிப்பிட்ட ஊர்களில் குடியிருக்க முடியவில்லை என்றுக்கூறி, வேறு ஊர்களில் அல்லது பட்டணங்களில் குடியிருக்கச் சென்று விடுவார்கள். அதற்குரிய காரணத்தை நாம் கேட்டால் அந்த ஊரில் சாபம் இருக்கின்றது என்றும், பிசாசின் கிரியை இருக்கிறது என்றும் கூறுவார்கள். எனவே ஊர் மாறி வந்து விட்டோம் என்றும் கூறுவார்கள். இப்படிப்பட்டவர்கள் ஒரு ஊரிலும் நிலையாக குடியிருக்க மாட்டார்கள். ஆனால் அபிஷேகம் பெற்று விட்டால், இவ்விதமான பயமோ, மந்திர வல்லமையோ ஒன்றும் நம்மை மேற்கொள்ள முடியாது .

தேவ கிருபையால் நானும் ஊழியப் பாதையில் என்னுடைய சொந்த ஊரை விட்டுவிட்டு தேவஅழைப்பு உள்ள ஊரில் ஊழியத்திற்கு செல்ல வேண்டியதாய் இருந்தது. அந்த வீடு குடியிருக்க உதவாத வீடாக காணப்பட்டது. அந்த ஊர் ஜனங்கள் அந்த வீட்டின் நிலையை அறிந்து அந்த வீட்டில் குடியிருக்க வேண்டாம் என்றும், வாடகை வீட்டில் குடியிருந்து ஊழியம் செய்யவும் ஆலோசனை கூறினார்கள். ஆனால் நாங்கள் இந்த வீட்டைத் தாரும் ஆண்டவரே என்று போராடி ஜெபித்தோம். ஜெபிக்க முடியாத இருளும், பிசாசின் கிரியைகளும் அங்கு காணப்பட்டது. தேவ பிள்ளைகள் கூடி அபிஷேகத்தால் ஜெபித்தபின், அந்த வீட்டில் உள்ள இருள் விலக வெளிச்சம் தோன்றியது. அப்போது ஜெபித்து, ஜெபித்து அந்த வீட்டில் சமாதானத்துடன் 13 ஆண்டுகள் குடியிருந்து ஊழியம் செய்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். அபிஷேகம் இல்லாமல் அந்த வீட்டிற்குச் சென்றிருப்போமானால், நிச்சயம் ஊழியப்பாதையில் தோல்வியே கண்டிருப்போம். கர்த்தர் அபிஷேகத்தின் மூலம் நுகத்தடியை முறித்துப்போட்டார். தயவு செய்து யாரும் இது ராசி இல்லாத வீடு என்றும், ராசியில்லாத ஊர், குடும்பம் என்றும் யாரையும் எதையும் பார்த்துக் கூறவேண்டியதில்லை எலிசாவைப்போல் எனக்கு பலமடங்கு ஆவியின் வரங்களைத் தாரும் என்று ஜெபித்தால் மட்டும் போதும். வசனங்களை வைத்து ஜெபிக்க வேண்டும். அப்படி செய்தால் எந்த மக்கள் நம்மை வெறுத்தார்களோ அவர்களே நம்மை விரும்பி ஜெபிக்க அழைப்பார்கள், நாம் போய் அபிஷேகத்துடன் ஜெபிக்கும் பொழுது எலிசாவின் நாட்களில் சாபங்கள் ஒழிந்தது போல நம் ஜெபத்தின் மூலம் பட்டணங்களில் உள்ள சாபங்களும் ஒழிந்து போகும். இந்த அற்புதங்களெல்லாம் நடைபெற நமக்கு அபிஷேகம் தேவை. ஜனங்கள் தேவையோடு இருக்கிறபடியால் அவர்களின் தேவையை சந்திக்க சாதாரணமான மனிதர்களால் முடியாது. அபிஷேகம் பெற்றவர்களால் மட்டுமே முடியும். நீங்கள் குடிருக்கும் பகுதியில் உள்ள மக்கள் உங்கள் மூலமாய் ஆசீர்வதிக்கப்படவேண்டும், அற்காகத்தான் உங்களைக் கர்த்தர் ஓர் குறிப்பிட்ட இடத்திலும், சபையிலும் வைத்திருக்கின்றார். இதை உணர்ந்து ஜெபியுங்கள். ஆண்டவர் உங்களை நடத்துவார். உங்கள் அபிஷேகம் சாபங்களை மாற்றும்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

Registrar of Newspapers for India,
Registration 71982/98, New Delhi

TN/WPP-168/SR/2024-2026
Licenced to Post without prepayment
Posted at Surandai on 27th 28th of every month

Postal Registration Number of R.N.P,KOL /005/2024-2026
Date of Publication : May 26,2024
Date of Posting : May 27,2024 Posted at Surandai

# வேதத்தின் மகத்துவங்களில்... சில...

**"வேதத்தின் மூலம் நம் பிரச்சனைகள் தீருமா? நிச்சயமாகத் தீரும்."** மாற்கு 10:46-52

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள் கூறுகின்றேன். நாம் பயன்படுத்தும் வேதாகமம் மூலம் நம்முடைய பிரச்சனையை ஜெபத்துடன் தீர்த்துக் கொள்ள முடியும். அப்படித் தீர்வான பிரச்சனைகள் வேதத்தில் உண்டு. அதில் ஒரே ஒரு பிரச்சனையையும், அது எப்படி மாறியது என்றும் மாற்கு 10:46-52ம் வசனம் வரை நாம் வாசித்துப் பார்த்து, அதில் சொல்லப்பட்ட வழிமுறைகளின்படி நாமும் செயல்பட்டோமானால், நமக்கும் உரிய ஆலோசனைகளையும், அற்புதங்களையும் நாம் பெற்றுக் கொண்டு, நீண்ட நாட்கள் சுகமாய் வாழலாம்.

பர்திமேயு என்ற மனிதன் வாழ்ந்த காலம். அவன் திமேயுவின் மகன் என்று வேதம் கூறுகின்றது. அவனுடைய தொழில் என்னவென்றால், வழியருகே உட்கார்ந்து பிச்சை எடுக்கும் தொழிலாகும். அதுமட்டுமல்ல அவன் கண் தெரியாத குருடனாகவும் காணப்பட்டான் என்று வேதம் கூறுகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு நாள் இயேசு திரளான மக்கள் கூட்டத்தின் நடுவில் வந்து கொண்டிருக்கிறார் என்று அறிந்தப்போது பர்திமேயு குருடன் இயேசுவை நோக்கி, இயேசுவே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான் என்று மாற்கு 10:47ல் வாசிக்கின்றோம். அவன் அவ்வாறு கூப்பிடத்தொடங்கினபோது, இயேசுவின் பின்னால் வந்த கூட்டத்தார், அவனைப் பார்த்து, அவன் பேசாதிருக்கும்படி அவனை அதட்டினார்கள். ஆனால் பர்திமேயு என்ற குருடன், சோர்ந்து போகவுமில்லை, இயேசுவை விட்டு விலகவும் இல்லை. அவன் இயேசுவே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாகக் கூப்பிட்டான் என்று மாற்கு 10:48ல் நாம் வாசிக்கின்றோம். இதுதான் பர்திமேயு செய்த சிறப்பான காரியமாகும். அவனது குரலைக்கேட்ட இயேசு, நின்று அவனை அழைத்து வரச்சொல்லி அவனுக்கு பார்வையைக் கட்டளையிட்டார். அவன் பார்வையடைந்து, பிச்சைப் பாத்திரத்தை தூர எறிந்து விட்டு, இயேசுவுக்கு பின்சென்று தன்னை அர்ப்பணித்தான்.

அன்பானவர்களே், வேதத்தின் மூலம் நம் பிரச்சனைகளை நாம் தீர்த்துக் கொள்ள முடியும். எப்படியெனில் முன்னிலும் அதிகமாய் கூப்பிடுவோம் அல்லது ஜெபம் செய்வோம். உங்கள் பிரச்சனை எதுவானாலும் மாறிப்போகும். வேதமே நமக்கு வழிகாட்டி ஜெபத்துடன் வேதத்தைத் தியானிப்போம். அப்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் பேசுவார். உங்கள் தேவைகளை வசனத்தின்படி சந்திப்பார், எல்லா பிரச்சனைகளுக்கும் வசனத்தின்படி தீர்வு உண்டு. ஆமென்.

*If undelivered please return to....*

**Bro.P.Duraisingh Gnanapragasam**
14-6-3(34) Ratna Complex, SURANDAI - 627 859.
Tenkasi (Dt), Tamil Nadu, India.
www.revival.org.in
Cell: 90255 53614, 99653 36459, 9942950132
Ph: 04633-290480

*To,*
*Bro/Sis*

*Pin*

Printed by P.Thanapaul, Published by P.Duraisingh Gnanapragasam owned by P.Duraisingh Gnanapragasam and Printed at Ravi Printers, 10-7-16 Bus-Stand Road, Surandai - 627 859. Tenkasi (Dist) and published at 14-6-3(34), Ratna Complex, Surandai - 627 859. Tenkasi (Dist) Editor P.Duraisingh Gnanapragasam.